S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE திங்கள் ஜனவரி 12 * 2026 * மலர் -1 * இதழ்-225* VOL-1 * ISSUE-225 விலை ரூ.3 * பக்கம் -4

### கரூர் நெரிசலில் 41 பேர் பலி: சி.பி.ஐ. முன் இன்று ஆஜராகிறார்:

# டெல்லியில் விஜய்க்கு பாதுகாப்பு வழங்க வேண்டும்; மின்னஞ்சல் மூலம் போலீசிடம் த.வெ.க. மனு!

## சேலம், தருமபுரியில் அடுத்த கட்ட மக்கள் சந்திப்புக்கு திட்டம்!

சென்னை, ஜன. 12

கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியான சம்பவம் குறித்த விசாரணைக்காக த.வெ.க. தலைவர் விஜய் சி.பி.ஐ. முன் இன்று ஆஜராகிறார். அதையொட்டி அங்கு அவருக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என டெல்லி போலீசாரிடம் மின்னஞ்சல் மூலம் த.வெ.க. மனு அளித்துள்ளது.

த.வெ.க. தலைவரும் , நடிகருமான விஜய் கடந்த செப்டம்பரில் பிரசாரப் பயணம் மேற்கொண்டார். செப்டம்பர் 29–ஆம் தேதி கரூரில் நடந்த பிரசாரத்தின் போது கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியாகினர். 110 பேர் காயமடைந்தனர். இது குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. அதைத் தொடர்ந்து தற்போது இந்த வழக்கு விசாரணையை சி.பி.ஐ. நடத்தி வருகிறது.

தற்போது சி.பி.ஐ. அதிகாரிகள் கரூரில் முகாமிட்டு தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். ஏற்கனவே சம்பவம் நடந்த கரூர் வேலுச்சாமிபுரம் பகுதியிலும் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தோரின் குடும்பங்கள், காயமடைந்தவர்கள், பிரசாரக் கூட்டம் நடைபெற்ற பகுதியில் உள்ள கடைகள், வியாபாரிகள், பொதுமக்கள் என பல்வேறு தரப்பிலும் விசாரணை நடத்தப்பட்டது.

மேலும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீஸ் அதிகாரிகள், கரூர் மாவட்ட கலெக்டர் தங்கவேல், எஸ்.பி. ஜோஸ், த.வெ.க. நிர்வாகிகள் புஸ்சி ஆனந்த், ஆதவ் அர்ஜுன், சி.டி.ஆர். நிர்மல் குமார், மதியழகன் உள்ளிட்டோரிடமும் விசாரணை நடத்தப்பட்டது. பின்னர் இவர்கள் அனைவரும் டெல்லிக்கு அழைக்கப்பட்டு அங்கு வைத்து பல்வேறு கேள்விகள் கேட்டு சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தினார்கள்.

இந்நிலையில் நேற்று முன்தினம் விஜய் பிரசாரத்திற்கு பயன்படுத்திய பேருந்தை சி.பி.ஐ. அதிகாரிகள் பறிமுதல் செய்து சென்னையில் இருந்து கரூருக்கு கொண்டு சென்றனர். அங்கு பேருந்தில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.டி.வி. கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்தனர். மேலும் பிரசாரப் பேருந்து ஓட்டுநர் பரணிதரனிடமும் விசாரணை நடத்தப்பட்டது. பின்னர் இவர் நாளை டெல்லியில் சி.பி.ஐ. முன் விசாரணைக்கு ஆஜராகவும் உத்தரவிடப்பட்டது.

இவர்களைத் தொடர்ந்து த.வெ.க. தலைவரும், நடிகருமான விஜய் நாளை (12–ஆம் தேதி) சி.பி.ஐ. முன் ஆஜராக அவருக்கு சம்மன் அனுப்பப்பட்டது. அதைத் தொடர்ந்து சி.பி.ஐ. முன் ஆஜராக விஜய் நாளை காலை தனி விமானம் மூலம் டெல்லி புறப்பட்டு செல்கிறார். பின்னர் டெல்லி லோதி எஸ்டேட் சாலையில் உள்ள சி.பி.ஐ. அலுவலகம் சென்று 11 மணிக்கு ஆஜராகிறார். விசாரணைக்குப் பின்னர் இரவில் டெல்லியில் தங்குகிறார். நாளை மறுநாள் அங்கிருந்து புறப்பட்டு சென்னை வந்தடைகிறார்.



எனவே விஜய்க்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என டெல்லி போலீசாருக்கு த.வெ.க. சார்பில் மின்னஞ்சல் மூலம் மனு அனுப்பப்பட்டுள்ளது. த.வெ.க. இணைப் பொதுச் செயலாளர் சி.டி.ஆர். நிர்மல் குமார் இந்த மனுவை அனுப்பி உள்ளார்.

இதற்கிடையே தமிழக வெற்றிக் கழகத் தலைவர் (த.வெ.க.) விஜயின் அடுத்தக் கட்ட மக்கள் சந்திப்பு எங்கு நடத்தப்பட உள்ளது என்பது பற்றிய தகவல்கள் வெளியாகி உள்ளது.

அண்மையில் ஈரோட்டில் த.வெ.க. பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. அதற்கு அடுத்ததாக விஜய் பொதுக்கூட்டங்கள் நடக்கவில்லை. விஜயின் கடைசிப் படமான "ஜனநாயகன்" படம் வரும் என கூறப்பட்டதால் அதற்கான வேலைகளில் விஜய் தீவிரமாக ஈடுபட்டு வந்தார்.

ஜனநாயகன் படம் அரசியல் கலந்த கதை என்பதால் அதற்கு பிறகு அடுத்த கூட்டங்களை நடத்தலாம் என்றும் விஜய் நினைத்தார். ஆனால் ஜனநாயகன் படம் வெளியாவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. சென்சார் சான்றிதழ் வழங்கக்கோரி தொடுக்கப்பட்டுள்ள வழக்கு நீதிமன்றத்தில் இருந்து வருகிறது. இந்த நிலையில் தான் விஜய்யின் அடுத்த கூட்டம் சேலம் அல்லது தருமபுரியில் நடத்தப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

டிசம்பர் மாதம் தேர்தல் ஆணையம் தமிழக வெற்றிக் கழகத்திற்கான சின்னத்தை ஒதுக்கீடு செய்ததுள்ளதாக தெரிகிறது.

எனவே தனது கட்சி சின்னம் எது என்பதை விஜய் அறிவிப்பார் என்ற தகவல் வெளியாகி உள்ளது. மேலும் த.வெ.க. கூட்டணியில் தே.மு.தி.க., டி.டி.வி. தினகரன், பா.ம.க. ராமதாஸ், ஓ.பி.எஸ்., புதிய தமிழகம் உள்ளிட்ட கட்சிகள் வர இருப்பதாகவும் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்படுகிறது.

அப்படி அவர்கள் வரும் பட்சத்தில் கூட்டணி கட்சிகளையும் மேடை ஏற்றி அறிமுகம் செய்ய விஜய் திட்டமிட்டு இருப்பதாகவும் கூறப்படுகிறது. இதற்காக இந்த கூட்டம் மிகப் பிரமாண்டமாக நடத்தப்படுகிறது.

இதனால் இந்த சின்னம் அறிவிப்பை பிரமாண்டமாக நடத்துவதற்காக இந்த பொதுக்கூட்டம் பிரமாண்டமாக நடத்த ஏற்பாடு செய்யப்பட உள்ளதாக கூறப்படுகிறது. காங்கிரசை தன் பக்கம் சேர்க்க ஒரு பக்கம் முயற்சி மேற்கொள்ளும் நிலையில் தேமுதிக, அமமுக, ஓபிஎஸ், பாமக ராமதாஸ், புதிய தமிழகம் கட்சிகளையும் தன் பக்கம் கூட்டணி வைக்க பேச்சுவாரத்தை நடந்ததாகவும் கூறப்படுகிறது



மதுரை மாவட்டம், அரசு இராசாசி மருத்துவமனையில் தேசிய சுகாதார இயக்க நிதி திட்டத்தின் கீழ் ரூ.2.81 கோடி மதிப்பீட்டில் முழு உடல் மல்டி ஸ்லைஸ் சி.டி.ஸ்கேனர் (16 ஸ்லைஸ்) கருவியை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார்கள்



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் மாவட்டம். காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், நத்தக்காடையூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாமினை பார்வையிட்டு பரிசோதனை மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ஜெயந்தி உள்ளார்.



கோயம்புத்தூர் தெற்கு வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் காப்பு அறையானது, முதற்கட்ட மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சரிபார்பு பணி மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந்ததையடுத்து, அங்கீகரிக்கப்பட்ட அனைத்துகட்சி பிரமுகர்கள் முன்னிலையில் மூடி முத்திரையிடப்பட்டதை மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

### பொங்கல் பண்டிகையை முன்னிட்டு

## காவேரிப்பட்டினம் வார சந்தையில் ரூ.2 கோடிக்கு ஆடுகள் விற்பனை!

காவேரிப்பட்டினம், ஜன. 12

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் வார சந்தையில் ஆடுகள் விற்பனை அமோகமாக நடைபெற்றது.

பண்டிகை தேவைக்காக சுற்றுவட்டார கிராமங்கள் மட்டுமின்றி தர்மபுரி, சேலம், திருப்பத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்தும் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் அதிக அளவில் சந்தைக்கு வருகை தந்தனர்.

சந்தையில் சுமார் ஆயிரக்கணக்கான ஆடுகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர் ஆடுகளின் எடை, இனத்தைப் பொருத்து ரூ.12 ஆயிரம் முதல் ரூ.40 ஆயிரம் வரை விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. இதன் மூலம் ஒரே நாளில் ரூ.2 கோடிக்கு மேல் வர்த்தகம் நடைபெற்றதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

பொங்கல் பண்டிகை, கோவில் விழாக்கள் காரணமாக ஆடுகளுக்கான தேவை அதிகரித்துள்ளதால், கடந்த வாரங்களை விட நேற்றைய சந்தையில் விலை கணிசமாக உயர்ந்திருந்தது. அதிக விற்பனை காரணமாக வியாபாரிகள் மகிழ்ச்சியடைந்துள்ளதுடன், விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பாளர்களும் நல்ல வருமானம் பெற்றுள்ளதாக தெரிவித்தனர்.

### சங்கராபுரம் அருகே தீ விபத்து:

## குடிசை எரிந்து சாம்பல்!

கள்ளக்குறிச்சி,ஜன.12

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் அருகே உள்ள செம்பராம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த நத்தகண்ணன் மகன் பழனியம்மாள் என்பவர், தனது வீட்டை பூட்டிவிட்டு அருகாமையில் வசித்து வரும் தனது தம்பி நடேசன் என்பவரின் வீட்டில் நேற்று இரவு தங்கியிருந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில், நள்ளிரவு திடீரென பழனியம்மாளின் கூரை வீடு தீப் பற்றி எரிய தொடங்கியது. இதைக் கண்ட அக்கம் பக்கத்தினர் அதிர்ச்சி அடைந்து உடனடியாக தீயணைப்பு நிலையத்திற்கு



தகவல் தெரிவித்தனர். ஆனால், தீயணைப்பு வாகனம் சம்பவ இடத்திற்கு வருவதற்குள் தீ வேகமாகப் பரவி, கூரை வீடு முழுவதும் எரிந்து முற்றிலும் சேதமடைந்தது. தீ விபத்தில் வீட்டில் வைக்கப்பட்டிருந்த ரூ.35,000 ரொக்கம், இரண்டு பவுன் தங்க நகைகள், வீட்டு உபயோகப் பொருட்கள், ஆதார் அட்டை, ரேஷன் அட்டை, வீட்டு பத்திரம் உள்ளிட்ட முக்கிய அரசு ஆவணங்கள் அனைத்தும் தீயில் எரிந்து சேதமடைந்தன. இந்த தீ விபத்து மின் கசிவினால் ஏற்பட்டதா? அல்லது வேறு ஏதேனும் காரணத்தால் ஏற்பட்டதா என்பது குறித்து சங்கராபுரம் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் சென்னை சேப்பாக்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சிந்தாதிரிப்பேட்டை வேதகிரி தெரு, பாலகிருஷ்ணன் தெரு, ரெக்ஸ் தெரு பகுதிகளைச் சேர்ந்த 2,000 குடும்பத்தினருக்கு பொங்கல் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் மேற்கு மாவட்ட செயலாளர் திரு. நே.சிற்றரசு, பகுதி கழக செயலாளர் எஸ்.மதன்மோகன் உள்பட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



"மக்கள் முதல்வரின் மனிதநேய விழா 2025" முன்னிட்டு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களின் ஏற்பாட்டில் "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" நிகழ்ச்சி வெற்றிகரமாக தொடர்ந்து சிறப்பு அழைப்பாளராக தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் எழும்பூர் வடக்கு பகுதி, 78 அவது வார்டு, அங்காளம்மன் கோயில் தெரு மற்றும் 65 அவது வார்டு, ஜெயராம் நகர் ஆகிய 2 இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு அறுசுவை காலை சிற்றுண்டி வழங்கி சிறப்பித்தார்.



மதுரை மாவட்டம், எல்லீஸ் நகர் போக்குவரத்து பணிமனையில் (பொன்மேனி கிளை) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மதுரை லிட் சார்பில் 67 புதிய புறநகர் பேருந்துகள் சேவையினை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் தலைமையில் அமைச்சர்கள் எஸ்.எஸ்.சிவசங்கர், பழனிவேல் தியாக ராஜன் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர்.



நெல்லை மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம் சார்பில், வள்ளியூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் அலெக்ஸ் அப்பாவு ஏற்பாட்டில் திராவிடப் பொங்கல், சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்ட விளையாட்டு மாரத்தான் போட்டியை தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் அப்பாவு, நெல்லை கிழக்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் கிரகாம்பெல், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெகதீஷ், உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# பாஜக அரசை கண்டித்து காங். கட்சியினர் ஆர்ப்பாட்டம்;ஏ.ஆர்.பி. பாஸ்கர் பேட்டி!

சேலம், வாணியம்பாடி, ஜன.12

சேலம் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஏ ஆர் பி பாஸ்கர், சேலத்தில் செய்தியாளர்களை சந்தித்து கூறும்போது, மன்மோகன் சிங் பிரதமராக இருந்த போது, கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்திற்காக, மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு திட்டம் என்று பெயர் வைக்கப்பட்டிருந்ததை, தற்போது மத்திய பாஜக அரசு பெயர் மாற்றம் செய்திருப்பதை கண்டித்து, பிப்ரவரி மாதம் 25ம் தேதி வரை, மாவட்ட தலைநகரங்களில் தொடர் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளதாக தெரிவித்த அவர்,

தவெக தலைவர் விஜய்க்கு ஆதரவாக காங்கிரஸ் நிர்வாகிகள் கூறிய கருத்துக்கள் கட்சியின் கருத்து அல்ல என்றும், விஜய் கட்சி ஆரம்பித்த நாளிலிருந்து இதுநாள் வரை ஒரு முறையாவது செய்தியாளர்களைசந்தித்து பேசியது உண்டா எனவும், இதுவரை அவருடைய கட்சிக் கூட்டங்களிலோ அல்லது பொது வெளியிலோ, அவர்களது கட்சியின் கொள்கைகள் குறித்து விளக்கமாக என்றைக்காவது அவர் பேசி உள்ளாரா, அரசியலைப் பற்றி அவருக்கு என்ன தெரியும் என்று, சேலம் மாநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் பாஸ்கர் கூறியது சேலத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் சார்பில், அவசர மத்திய செயற்குழு கூட்டம். சேலம் கோட்டை மைதானத்தில் உள்ள சுகன் அம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநிலம் முழுவதிலும் இருந்து வருவாய்த்துறை சங்க நிர்வாகிகள் மற்றும் ஊழியர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். கடந்த வாரம் தமிழக அரசு அறிவித்த திருத்தி அமைக்கப்பட்ட ஓய்வூதிய திட்டங்கள் குறித்து, நிர்வாகிகள் விரிவான ஆலோசனை நடத்தினர்.



# பெண் குழந்தைகளுக்கு சிலம்பம் தற்காப்பு பயிற்சி நிறைவு விழா!

தருமபுரி, ஜன.12

தருமபுரி மாவட்டம் , தருமபுரிஒன்றியம் எஸ்.கொட்டாவூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்விதிட்டத்தின்மூலம் 6 முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் பெண் குழந்தைகளுக்கு சிலம்பம் தற்காப்பு பயிற்சி அளிக்கப்பட்டது பெண் குழந்தைகள் பாதுகாப்பாக இருப்பதற்கு தற்காப்பு கலை மிகவும் அவசியம்.

இதற்காக சிலம்பம் தற்காப்பு பயிற்சியை பள்ளிக்கல்வித்துறையின் வழிகாட்டுதலின் படி வாரம் இரண்டு வகுப்புகள் வீதம் மூன்று மாதங்கள் 24 வகுப்புகள் சிலம்ப பயிற்சி அளிக்கப்பட்டது. சிலம்பம் பயிற்சியாளர் முருகன் மாணவிகளுக்கு பயிற்சியை வழங்கினார் 6ஆம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் பெண் குழந்தைகள் இப் பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

சிலம்பம் பயிற்சியின் நிறைவு விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது இந் நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு மாணவிகளை பாராட்டி ஊக்குவித்தனர் இத்தகைய தற்காப்பு பயிற்சி மாணவிகளின் தன்னம்பிக்கையை உயர்த்துவதோடு உடல் மற்றும் மன வலிமையை வளர்க்கும் என ஆசிரியர் தெரிவித்தனர்.

# பெட்டிக்கடை உரிமையாளர் வீட்டில் 5 சவரன் நகை கொள்ளை;மர்ம நபருக்கு வலைவீச்சு!



வாணியம்பாடி, ஜன.12

வாணியம்பாடியில் பெட்டிக்கடை உரிமையாளர் வீட்டின் மேற்கூரை உடைத்து வீட்டிற்குள் நுழைந்த மர்ம நபர்கள் பீரோவில் இருந்த 5 சவரன் தங்க நகைகள், வெள்ளி பொருட்கள் மற்றும் பணம் கொள்ளை.

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நேதாஜி நகர் பகுதியை சேர்ந்தவர் ஜாவித். இவர் அதே பகுதியில் சாலையோரம் பெட்டிக்கடை வைத்து தொழில் செய்து வருகிறார். இவர் கடந்த 6 ஆம் தேதிவீட்டைபூட்டிவிட்டுகுடும்பத்துடன் ஹைதராபாத்தில் நடைபெற்ற உறவினர் திருமணநிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக சென்றுள்ளனர்.

நிகழ்ச்சி முடித்துவிட்டு மீண்டும் இன்று வீடு திரும்பிய போது பூட்டப்பட்டிருந்த வீட்டை திறந்து பார்த்த போது வீட்டின் மேற்கூரை உடைத்து உள்ளே இறங்கிய மர்ம நபர்கள் பீரோவில் வைக்கப்பட்டிருந்த 5 சவரன் தங்க நகைகள், வெள்ளிப் பொருட்களை கொள்ளை அடித்து பின்னர் வீடு முழுவதும் மிளகாய் பொடி தூவி மர்ம நபர்கள் சென்று இருப்பது தெரிய வந்தது.

சம்பவம் குறித்து ஜாவித் நகர காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

புகாரின் பேரில் நகர போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தடயங்கள் சேகரித்து வழக்கு பதிவு செய்து மர்ம நபர்களை வலைவீசி தேடி வருகின்றனர்.



# வாணியம்பாடியில் தி.மு.க. சார்பில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு விளையாட்டு போட்டிகள்!

வாணியம்பாடி, ஜன.12

வாணியம்பாடி நகர திமுக சார்பில் பொங்கல் பண்டிகை முன்னிட்டு பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு ரூபாய் 2 லட்சத்தி 50 ஆயிரம் ரொக்கப்பணம் மற்றும் கோப்பைகள் வழங்கப்பட்டது.

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நகர திமுக சார்பில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டது.

விளையாட்டு போட்டிகளுக்கு நகர திமுக செயலாளர் வி.எஸ் சாரதிகுமார் தலைமை வகித்தார்.

வாரச்சந்தை மைதானத்தில் கபடி போட்டியும், சென்னாம் பேட்டை பகுதியில் கிரிக்கெட் போட்டியும்,

நேதாஜி நகர் பகுதியில் கைப்பந்து போட்டியும், கச்சேரி சாலையில் இறகு பந்து போட்டி என போட்டிகள் கடந்த 2 நாட்களாக நடத்தப்பட்டது.

போட்டிகளின் இறுதி போட்டி நேற்று நடைபெற்று அனைத்து போட்டிகளின் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா வாரசந்தை மைதானத்தில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக

தொழிலதிபர் ஐ. எஃப்.ஷக்கீல் அஹ்மத் கலந்து கொண்டு ஒவ்வொரு போட்டியில் முதல் 4 இடங்களை பிடித்த அணிகளுக்கு ரூபாய் 2 லட்சத்தி 50 ஆயிரம் ரொக்கப்பணம், கோப்பைகள் மற்றும் பரிசு பொருட்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் நகரமன்ற துணைத்தலைவர் கயாஸ் அஹமத், நகர கழக துணை செயலாளர்கள் கே.தென்னரசு, குபேந்திரன்,

மாவட்ட பிரதிநிதி ரவி, நகர அவைத்தலைவர் முகமத் ஜான் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள், கட்சி நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர்.



எம்ஜிஆரின் 109 ஆவது பிறந்தநாள் விழா, வரும் 17ஆம் தேதி கொண்டாடப்பட உள்ள நிலையில், அது குறித்த ஆலோசனைக் கூட்டம். சேலம் நெடுஞ்சாலை நகரில் உள்ள மாநகர அதிமுக கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. ஆலோசனைக் கூட்டத்தில் மாநகர அதிமுக செயலாளர் பாலு, பொறுப்பாளர் சிங்காரம், ஆகியோர் தலைமையில் அதிமுக பகுதி கழக செயலாளர்கள் யாதவமூர்த்தி, குமார், பிரகாஷ், உள்ளிட்ட 300க்கும் மேற்பட்ட அதிமுக நிர்வாகிகள் கலந்து கொண்டு, ஆலோசனை மேற்கொண்டனர்.



தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், நெருப்பூர், அரசு மேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் நடைபெற்ற 'நலம் காக்கும் ஸ்டாலின்' என்ற முழு உடல் பரிசோதனை மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், பார்வையிட்டு, கட்டுமான தொழிலாளர்களுக்கு கட்டுமான நலவாரிய பதிவு அட்டைகளை வழங்கினார்கள். உடன் துணை இயக்குநர் சுகாதாரம் மரு.இராஜேந்திரன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சு.சரவணன், மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.






# அதியமான்கோட்டை கால பைரவர் கோவிலில் தேய்பிறை அஸ்டமியையொட்டி ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம்!

அதியமான்கோட்டை, ஜன.12

இந்தியாவிலேயே காசிக்கு அடுத்தபடியாக காலபைரவருக்கு தனி ஆலயம் தருமபுரி மாவட்டம் அதியமான்கோட்டையில் அமைந்துள்ளது

இக்கோவிலில் மாதம்தோறும் தேய்பிறை அஷ்டமி நாழில் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், அண்டை மாநிலமான கேரளா, கர்நாடகாவில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் இக்கோவிலிக்கு வந்து தங்களது வேண்டுதலை நிறைவேற்றும் வகையில் பூசணி மற்றும் தேங்காய் தீபமேற்றி வழிபாடு செய்கின்றனர்.

தேய்பிறை அஸ்டமியான இன்று அதிகாலை காலபைரவருக்கு அபிஷேக ஆராதனை நடைபெற்று. சந்தனகாப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பளித்தனர்.

# திருப்பூர் மாணவிக்கு விருது!

திருப்பூர்,ஜன.12–

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், காரணம் பேட்டையைச் சேர்ந்தவர் மோகன்ராஜ் மற்றும் கீதா தம்பதியினரின் மூத்த மகள் மித்ரா, ஆண்டாள் அருளிய திருப்பாவையின் 30 பாசுரங்களையும் (ஒவ்வொரு பாசுரத்திற்கும் எட்டு வரிகள் வீதம் மொத்தம் 240 வரிகள்) சுமார் 6 நிமிடங்களில் தெளிவாக பாடி சாதனையைப் புரிந்துள்ளார்.

இந்த சாதனையை கௌரவித்து மாணவியை ஊக்கப்படுத்தும் வீதம் திருக்கோவில் திருத்தொ ண்டர் அறக்



கட்டளை சார்பாக பல்லடம் அருகிலுள்ள அருள் விநாயகர் திருக்கோவிலில் திருப்பாவைச் செல்வி என்னும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. மாணவிக்கு பாசுரங்களை இளம் வயதிலேயே கற்றுக் கொடுத்த பெற்றோர்களுக்கும் பொன்னாடை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. திருக்கோவில் திருத்தொண்டர் அறக்கட்டளையின் அமைப்பாளர் கொங்கு ராமகிருஷ்ணன் தலைமையில், செயலாளர்மோகனப்பிரியா, பொருளாளர்சரவணசுப்பிரமணியன், ஆல்வின்னர்ஏஞ்சல்இன்ஸ்டிட்யூஷன்ஸ் முதல்வர் தங்கராஜ், ஸ்டெப் இன் டிஜிட்டல் இயக்குநர் ஹரிஹரன் மற்றும் அருள் விநாயகர் திருக்கோவில் கமிட்டி உறுப்பினர்கள் முன்னிலையில் நிகழ்ச்சி நடைபெற்றது.

# பா.ஜ.க. தேசிய செயல் தலைவர் நிதின் நபின் கோவை வருகை!

சென்னை, ஜன.12–

பா.ஜ.க. தேசிய செயல் தலைவர் நிதின் நபின் இன்று கோயம்புத்தூர்வந்துள்ளார். பா.ஜ.க. ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றார். பா.ஜ.க. தலைவர்களையும் சந்தித்துப் பேசுகிறார். தமிழ்நாட்டில் சட்டசபை தேர்தல் நெருங்கி வருவதை முன்னிட்டு தேசிய தலைவர்கள் அடுத்தடுத்து வர உள்ளார்கள். அந்த வகையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா சமீபத்தில் தமிழ்நாட்டுக்கு வந்தார். அடுத்ததாக பிரதமர் நரேந்திர மோடியும் தமிழ்நாட்டுக்கு வர உள்ளார். அவர் முதலில் ஜனவரி 28–ஆம் தேதி கன்னியாகுமரிக்கு வருவார் என தெரிவி`க்கப்பட்டது. ஆனால் 23–ஆம் தேதி மதுரைக்கு வருவார் என்று கூறப்படுகிறது. மேலும்தமிழக பா.ஜ.க.தேர்தல் பொறுப்பாளராக உள்ள பியூஷ் கோயலும் தமிழ்நாட்டுக்கு வந்து சென்றுள்ளார். இப்படிப்பட்ட நிலையில் பா.ஜ.க. தேசிய செயல் தலைவர் நிதின் நபின் இன்று கோவைக்கு வந்துள்ளார். கோவை எஸ்.என்.ஆர். அரங்கத்தில் தமிழக பா.ஜ.க.வின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றார்.

இந்த விழாவில் தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன், வானதி சீனிவாசன் மற்றும் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002. Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH

# பயிர் கடன் பணம்தான் பொங்கல் பரிசு தொகுப்பு!

## அண்ணாமலை குற்றச்சாட்டு!!

திருப்பூர்,ஜன.12–

திருப்பூர்வடக்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சி சார்பில் தமிழர் என்றே சொல்வோம் தமிழகத்தை வெல்வோம் என்ற மாநாடு திருப்பூர் பாண்டியன் நகர் பகுதியில் நடைபெற்றது. இதில் தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் அண்ணாமலை பேசுகையில்;



இந்திய அரசுக்கு தமிழகத்திற்கு வருமானம் தரும் நகரம் குப்பை மேடாக மாற்றி உள்ளனர். கஞ்சா அதிகம் புழங்கும் நகராக மாற்றி உள்ளனர். எந்த நகரில் மாற்றம் வருகிறதோ இல்லையோ இங்கு மாற்றத்துடன் நமது சட்டமன்ற உறுப்பினர்கள் தேவை. திமுக எம்.எல்.ஏ கூட மேயரை எதிர்த்து போராட்டம் என்ற டிராமா செய்வதை வேறு எங்கும் பார்க்க முடியாது. கேரளாவில் கம்யூனிஸ்டை எதிர்த்து கம்யூனிஸ்டே ஆர்ப்பாட்டம் செய்வார்கள் அது போல. திருப்பூர் குப்பை பிரச்சனைக்கு ஆர்ப்பாட்டம் செய்து மேடையில் பேசிய நபர்களை பொது வெளியில் மன்னிப்பு கேட்க வைத்து அதே பகுதியில் குப்பை கொட்டியவர் திமுக மேயர். திமுக ஆட்சியில் குப்பை நகரமாக தமிழக நகரங்கள் உள்ளது. போன ஆண்டு 99 சதவீதம், போன மாதம் 94, போன வாரம் 90 இன்று 80 நிறைவேற்றி விட்டதாக சொல்லி வருகிறார். சினிமாவில் இருந்து மக்களை வென்றார் என்றால் அது புரட்சித் தலைவர் மட்டும் தான். திமுகவை அகற்ற வேண்டும் என்றால் அங்கு ஆட்சி நடத்த தெரிய வேண்டும். முதல்வர்மட்டுமல்லஅமைச்சர்கள்தேவை, பக்குவம் தேவை, இது இங்கி பிங்கி பாங்கி தேர்தல் அல்ல. அனுபவம் மிக்கவர்கள், அரசியல் ஆழம் தெரிந்தவர்கள் தேவை, திமுக செய்த தவறை தீர்க்கவே 2 ஆண்டுகள் தேவை. அதிமுக ஆட்சியில் இருந்து செல்லும் போது 4.5 லட்சம் கோடி கடன் என்றால் அடுத்த 4 அரை ஆண்டுகளில் 5 லட்சம் கோடி கடன் பெற்று எதற்கென்றே சொல்லாமல் அதிமுகவை குறை சொல்லி வருகின்றனர். புதிய பயிர் கடன்கேட்டவர்களுக்கு பணம் இல்லை அந்த பணத்தை எடுத்து 3 ஆயிரம் பொங்கலுக்கு வழங்கி உள்ளனர் என்றார். தொடர்ந்து தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் பேசுகையில்; திருப்பூர் ஆட்சி மாற்றத்திற்கான திருப்பம் ஏற்படும், தமிழகத்தில் சிறந்த ஊர் திருப்பூர்தான் 40 ஆயிரம் கோடி ரூபாய் ஏற்றுமதி என பல்லாயிரம் பேரை வாழவைக்கும் ஊர். கடந்த அதிமுக ஆட்சியில் 5 ஆயிரம் தரச்சொன்னார். ஆனால் இன்று 3 ஆயிரம் தர முடியவில்லை. தேர்வெழுதி 15 ஆண்டுகள் கடந்தும் இடை நிலை ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்க வில்லை. வெற்று விளம்பரம் இல்லாத ஆட்சியை நாம் பார்க்க வேண்டும், தூய்மை பணியாளர்கள், அரசு ஊழியர்கள் கண்ணீர் வடிக்காத ஆட்சியை நாம் காண வேண்டும். எண்ணிக்கை என்பது முக்கியமல்ல, எப்படி பட்டவர்கள் ஆட்சிக்கு வரவேண்டும் என்பது தான் முக்கியம். திருப்பூர் ஆட்சி மாற்றம் தரும் ஊர் திருப்பரங்கு ன்றம் ஆட்சியை முடிக்கும் ஊர். யார் வேட்பாளர் என்பது முக்கியமல்ல எந்த காட்சி என்பது முக்கிய மல்ல தாமரையோ, இரட்டை இலையோ எத்தனை சின்னம் என்றாலும் அதில் வாக்களித்து வெற்றி பெற வைக்க வேண்டும் என பேசினார்.

# படுக்கையில் சிறுநீர் கழித்ததால் சிறுமிக்கு சூடு வைத்த தாய் கைது!

திருவனந்தபுரம்,ஜன.12–

நேபாளத்தை சேர்ந்தவர் முகமது இம்தியாஸ். இவருக்கு 5 வயதில் மகள் உள்ளாள். இதற்கிடையே முகமது இம்தியாஸ், பீகார் மாநிலத்தை சேர்ந்த நூர் நாசர் என்கிற ரூபி (வயது 35) என்பவரை 2வது திருமணம் செய்துகொண்டார். முகமது இம்தியாஸ் தனது மனைவி, மகளுடன் கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டம் கஞ்சிக்கோடு அருகே கிழக்கேமுறி பகுதியில் வசித்து வருகிறார். இந்தநிலையில், அங்கன்வாடி மையத்தில் இருந்த 5 வயது சிறுமி உட்கார முடியாமல் சிரமப்பட்டாள். இதை பார்த்த அங்கன்வாடி பணியாளர் சிறுமியிடம் கேட்ட போது, படுக்கையில் சிறுநீர் கழித்ததாக கூறி வளர்ப்பு தாய் உடலில் சூடு வைத்ததாக கூறினாள். இதைகேட்டு அதிர்ச்சி அடைந்த பணியாளர், இதுகுறித்து வாளையார் போலீசாரிடம் தெரிவித்தார்.

அதன் பேரில் இன்ஸ்பெக்டர் ராஜீவ் தலைமையிலான போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதில் படுக்கையில் சிறுநீர் கழித்ததாக கூறி சிறுமியை தொடர்ந்து ரூபி சூடு வைத்து துன்புறுத்தி வந்தது தெரியவந்தது. அவரை போலீசார் கைது செய்தனர். இதுதொடர்பாக முகமது இம்தியாசிடமும் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



# ஈரோடு 14வது வார்டு பொதுமக்களுக்கு ரூ.3,000 ரொக்கத்துடன் பொங்கல் பரிசுத் தொகுப்பு!

ஈரோடு, ஜன.12

தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை தமிழக மக்கள் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரொக்கப் பணம் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட 14வது வார்டு பகுதியில் பொதுமக்களுக்கு பொங்கல் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஈரோடு மாநகராட்சி 14வது வார்டு மாமன்ற உறுப்பினர் புனிதா சக்திவேல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், தகுதிவாய்ந்த குடும்ப அட்டைதாரர்களுக்கு தமிழக அரசின் அறிவிப்பின் படி தலா 3,000 ரூபாய் ரொக்கப் பணம் மற்றும் பொங்கல் திருவிழாவிற்குத் தேவையான பச்சரிசி, சர்க்கரை உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் திமுக தெற்கு மாவட்ட நெசவாளர் அணி முன்னாள் அமைப்பாளர் சக்திவேல் மற்றும் செயலாளர் மாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்து, பொதுமக்களுக்கு நேரடியாகப் பொங்கல் பரிசுகளை வழங்கி பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்தனர். நிகழ்ச்சியில் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டு வரிசையில் நின்று பொங்கல் தொகுப்பினைப் பெற்றுச் சென்றனர். பண்டிகைக் காலத்தில் தமிழக அரசு வழங்கிய இந்த நிதியுதவி மற்றும் பொருட்கள் தங்களுக்குப் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் என அப்பகுதி பொதுமக்கள் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். இந்நிகழ்வில் உள்ளூர் முக்கியப் பிரமுகர்கள், வார்டு பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# சீனாவுக்கு இந்தியாவின் ஏற்றுமதி 33 சதவீதம் அதிகரிப்பு!

சென்னை,ஜன.12–

ரஷியா பொருளாதார தடை மசோதா எனப்படும் இந்த மசோதாவுக்கு டிரம்ப் தற்போது ஒப்புதல் அளித்து உள்ளார். இது விரைவில் நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டு உள்ளது. இந்திய பொருட்களுக்கு அமெரிக்கா அதிக வரி விதிப்பதால், ஏற்றுமதிக்கு வேறு நாடுகளை இந்தியா நாடத் தொடங்கி உள்ளது. அதன்படி, இந்தியா அதிகமாக ஏற்றுமதி செய்யும் நாடாக சீனா உருவெடுத்துள்ளது.

நடப்பு நிதியாண்டில், ஏப்ரல் முதல் நவம்பர் மாதம் வரையிலான காலத்தில் சீனாவுக்கு இந்தியா ஏற்றுமதி செய்த பொருட்களின் மதிப்பு 1,222 கோடி டாலராக உயர்ந்துள்ளது. இது, கடந்த நிதியாண்டின் இதே கால கட்டத்துடன் ஒப்பிடுகையில் 33 சதவீதம் அதிகம். எண்ணெய் உணவுப்பொருட்கள், கடல்சார் தயாரிப்புகள், தொலைத்தொடர்பு சாதனங்கள், மசாலா பொருட்கள் ஆகியவற்றால் ஏற்றுமதி அதிகரித்துள்ளது.





பவானியில் நகர தி.மு.க. கட்சி அலுவலகத்தை முன்னாள் அமைச்சர் தோப்பு வெங்கடாஜலம் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். அருகில் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



# திருப்பத்தூரில் நகர தி.மு.க. மற்றும் நகர இளைஞர் அணி சார்பில் கைப்பந்து போட்டி!

## வெற்றி பெற்றவர்களுக்கு எம்.பி., எம்.எல்.ஏ. பரிசுகளை வழங்கினர்!!

திருப்பத்தூர் ஜன.12

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் சார் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில் திமுக இளைஞர் அணி சார்பில் திராவிட பொங்கல் திருநாளை முன்னிட்டு நகர செயலாளர் ராஜேந்திரன் தலைமையில் விழா ஏற்பாடு டி எஸ் மாதேஸ்வரன் நகர இளைஞரணி அமைப்பாளர்

மாபெரும் கைப்பந்து போட்டி நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் தேவராஜ் நல்லதம்பி ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார்.

உடன் இந்த நிகழ்ச்சியின் போது. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வடிவேல். பொதுக்குழு உறுப்பினர் டி ரகுநாத். நகர மன்ற தலைவர் சங்கீதா வெங்கடேசன். நகர இளைஞரணி துணை அமைப்பாளர் இ ஐயப்பன். அரவிந்தன். ரமணன். மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் வெங்கடேசன். மாவட்ட அறங்காவல குழு தலைவர் சந்திரசேகரன். முன்னாள் மாவட்ட துணை செயலாளர் கே பி ஜோதிராஜ்.நகர துணை செயலாளர் செல்வம் ஐ டிவி தொழில்நுட்ப அணி நதிம். சதீஷ்குமார். மற்றும் மாணவர் அணி மற்றும் இளைஞர்கள் பள்ளி மாணவ மாணவிகள் போட்டியில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# தேசிய விளையாட்டுப் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற தமிழக வீரர்களுக்கு ஈரோட்டில் உற்சாக பாராட்டு விழா!

ஈரோடு, ஜன.12

டெல்லி ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் நடைபெற்ற 13வது தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று, ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் (Overall Championship) பட்டத்தை வென்று சாதனை படைத்த தமிழக வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு பாராட்டு விழா இன்று ஈரோட்டில் நடைபெற்றது.

சன்யுக்தா பாரதிய கேள் பவுண்டேஷன் தமிழ்நாடு அமைப்பின் சார்பாக ஈரோடு பெரியார் நகர் 80 அடி ரோட்டில் உள்ள அரங்கில் இந்த விழாவிற்கு ஏற்பாடு செய்திருந்தன. விழாவிற்கு சன்யுக்தா பாரதிய கேள் பவுண்டேஷன் மாநிலத் தலைவர் நைல் அ. ராஜா தலைமை தாங்கி, வெற்றி பெற்ற வீரர்களுக்குப் பரிசுகளை வழங்கிச் சிறப்பித்தார். தேசிய பயிற்சியாளரும், தேசிய நடுவரும், அமைப்பின் மாநில பொதுச்செயலாளருமான பிரகாஷ் முன்னிலை வகித்து, தேசிய அளவில் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த வீரர்களின் திறமையைப் பாராட்டி வாழ்த்திப் பேசினார். இவ்விழாவில் மாநிலம் முழுவதிலும் இருந்து வந்து கலந்து கொண்ட வீரர், வீராங்கனைகளுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களும், நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை சன்யுக்தா பாரதிய கேள் பவுண்டேஷன் ஈரோடு கிளை நிர்வாகிகள் மற்றும் விளையாட்டு ஆர்வலர்கள் ஒருங்கிணைந்து செய்திருந்தனர்.

# ராஜபாளையம் நர்சிங் கல்லூரியில் பொங்கல் விழா!

ராஜபாளையம், ஜன.12

ராஜபாளையம் மொட்டை மலை பகுதியில் உள்ள சுரன் நர்சிங் கல்லூரியில் தைப்பொங்கல் விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

கல்லூரி நிர்வாகியும், பிரபல தொழிலதிபரும், குவைத்ராஜா மக்கள் சமூக இயக்க தலைவருமான டாக்டர் குவைத்ராஜா, அவரது துணைவியார் சுபா குவைத் ராஜா ஆகியோர்

தலைமையில் மேளதாளம் முழங்க நாதஸ்வரம் இசைத்து மண் பானையில் பொங்கலிட்டு சூரிய உதயத்தின் போது பொங்கல் பொங்கி வர மாணவிகள் பொங்கலோபொங்கல் ஆரவார குரல் எழுப்ப பொங்கல் விழா களை கட்டியது.

விழாவில் சிறப்பாக விருந்தினராக ராஜ பாளையம் வட்டாட்சியர் ராஜீவ் காந்தி குவைத் ராஜாவின் மகன் பீமா, அவரது துணைவியார்

ஸ்ரீமதி, மற்றொரு புதல்வர் சுரன், கல்லூரி நிர்வாக அதிகாரி ராஜா கலந்து கொண்டு விழாவை நடத்தினர்

மாணவிகள் பாரம்பரிய உடைகளில் மாட்டு வண்டியில் அமர்ந்து கொண்டு உற்சாகத்துடன் கல்லூரி வளாகத்தை சுற்றி வந்தனர். சிலம்பாட்டம், உரியாட்டம் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு மாணவிகளுக்கு கல்லூரி நிர்வாகி டாக்டர் குவைத் ராஜா பரிசுகள் வழங்கினார். இந்நிகழ்வில் மாணவிகள் தங்களது பெற்றோர்களுடன் கலந்து கொண்டு மகிழ்ந்தது குறிப்பிடத்தக்கது.





# தாராபுரத்தில் நடிகர் சங்கம் சார்பில் இசைக்கலைஞர்களுக்கு விருது!

தாராபுரம்,ஜன.12

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில், வேலூர் மாவட்ட நடிகர் சங்கம் சார்பில், நடைபெற்ற 24 ஆம் ஆண்டு கலை விழா மாநாட்டில் கலந்து கொண்ட சிறந்த கலைஞர்களுக்கான விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றன.

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் வேலூர் குடியாத்தம் அருகே வேலூர் மாவட்ட நடிகர் சங்கம் சார்பில், 24 ஆம் ஆண்டு கலை விழா மாநாடு மற்றும் பாராட்டு விருதுகள் நிகழ்ச்சி கடந்த மாதம் நடைபெற்றன.

இந்த நிகழ்ச்சியில் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு, நகர் மன்ற தலைவர் சௌந்தர்ராஜன், மதுரை மாநில தலைவர் தங்கவேல், மாநில மாவட்ட பொதுச் செயலாளர் சிவக்குமார், மாவட்டத் தலைவர் ராமகிருஷ்ணன், மாவட்ட பொருளாளர் செந்தில் குமார் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்த நிகழ்ச்சியில், தமிழ்நாடு முழுவதும் இசை கலைஞர்கள் கலந்து கொண்டு பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பாராட்டு விருது மற்றும் சான்றிதழ்கள் வழங்க சிறந்த கவிஞர்களை தேர்வு செய்யப்பட்டனர்.

அவற்றினை இந்த கலை விழா மாநாடு நிகழ்ச்சியில் தமிழ்நாடு முழுவதும் இசை கலைஞர்கள் கலந்து கொண்டதில் மாவட்டம் மற்றும் தாலுகா வாரியாக பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றனர். அந்த வகையில், திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தாலுகா உட்பட்ட மூலனூரில் புதிதாக உருவாக்கப்பட உள்ள சங்கத்தின் தொடக்க நாளான இன்று சுப்பிரமணி, வேணுகோபால் பிள்ளை, நாச்சிமுத்து, துரைசாமி, பால்ராஜ், பழனி, மகேந்திரன், ஆண்டவன், நல்லமுத்து சோமசுந்தரம், பி.நல்லமுத்து உள்ளிட்ட இசை கலைஞர்களுக்கு தமிழ்நாடு அரசு விருது பெற்ற இசைக் கலைஞர் கள்ளிமந்தியம் நாதஸ்வர கலை நன்மணி பட்டம் பெற்ற ரத்தினம் அவர்கள் தலைமையில் விருதுகள் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டனர்.

# மத்தூர் ஒன்றியத்தில் தி.மு.க. சார்பில் மாபெரும் கிரிக்கெட், கைப்பந்து, கபடி போட்டிகள்!

கிருஷ்ணகிரி, ஜன.12

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் மத்தூர் வடக்கு தெற்கு திமுக ஒன்றியத்தின் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உத்தரவின் படி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் எம் எல் ஏ ஆலோசனின் படி, திராவிட பொங்கல் சமூக நீதிக்கான திருவிழா மாபெரும் ஒன்றிய அளவிலான விளையாட்டு போட்டிகள் கிரிக்கெட், கைபந்து, கபடி உள்ளிட்ட போட்டிகள், மத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் குண. வசந்தரசு தலைமையில், மத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே. ஆர்.கே. நரசிம்மன் வரவேற்புரையில், முன்னாள் ஒன்றிய குழு துணைத் தலைவர் ராமமூர்த்தி, முன்னாள் ஊராட்சி செயலாளர் கமலநாதன், அறிவழகன், மாவட்ட பிரதிநிதி சாந்தமூர்த்தி, ஒன்றிய துணை செயலாளர் லலிதா ரவி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கதிர்வேல், ஒன்றிய குழு முன்னாள் தலைவர் விஜயலட்சுமி பெருமாள், பால்மூர்த்தி, மோகன் குமார், சிவா ஆகியோர் முன்னிலையில், மத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் கிரிக்கெட் போட்டியும், அரசு ஒன்றிய துவக்கப்பள்ளியில் கைப்பந்து போட்டியையும், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் கபடி போட்டியும் நடைபெற்றது. போட்டியில் ஏராளமான விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டு விளையாடினர்.

# திரௌபதி 2 படத்தை ரிலீஸ் செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து வல்லாளப்பட்டி கிராமத்தில் ஆர்ப்பாட்டம்!

மேலூர் ஜன.12

மதுரை மாவட்டம் மேலூர் அருகே உள்ள அ.வல்லாளப்பட்டி கிராமத்தில் சோழர் ஆட்சியின் இறுதி காலத்தில் சோழமண்டலத்தின் ஒரு பகுதியை ஆண்டவர்கள் போசளர்கள் நூற்றுக்கணக்கான கள்ளர்களின் பட்டங்களின் போசளர் என்பது ஒன்று. அந்த போசள வம்சத்தில் பெரும்பாலான மன்னர்கள் வல்லாள தேவன் என அழைக்கப்படுகின்றனர். சில மாதங்களுக்கு முன்பு திரைப்பட இயக்குனர் மோகன் ஜியிடம் மூன்றாம் வல்லாளத்தேவர் வரலாற்றை திரௌபதி 2 என திரைப்படம் எடுப்பது குறித்து அறிவித்து அறிவிப்பு வெளியிட்ட பொழுது அவரிடம் நாங்கள் வல்லாள தேவன் வரலாற்றை திரித்து வேறு சமூகத்தின் பெயரால் திரைப்படம் எடுத்து விடாதீர்கள் என கேட்டுக்கொண்டனர். அதற்கு அவர் கண்டிப்பாக படத்தை முடித்தவுடன் உங்களிடம் காட்சிப்படுத்திவிட்டுத் தான் திரையிடுவேன் என கூறியுள்ளார்.கிராம பொதுமக்கள் இரண்டு மூன்று முறை வழக்கறிஞர் மூலம் சட்டபூர்வமான அறிவிப்பு கொடுத்தும் அவர் எவ்வித விளக்கமும் சொல்வதற்கு தயாராக இல்லாமல் அவற்றை புறக்கணித்துள்ளார். இதனால் எங்களது உணர்வுகளை புண்படுத்தி எங்களது கோரிக்கையை ஏற்க மறுத்து தவறான வரலாற்றை பதிவு செய்யும் திரௌபதி 2 படத்தை வெளியிடுவதை இயக்குனர் மோகன் ஜி நிறுத்தி வைக்க வேண்டும். மீறினால் தென்மாவட்டங்களில் அந்த திரைப்படத்தை திரையிடும் திரையரங்களை முற்றுகையிட்டு போராட்டம் செய்வோம் என வல்லாளப்பட்டி வெள்ளிமலையாண்டி கோவில் முன்பு கிராம பொது மக்கள் கோஷமிட்டனர். இதில் அம்பலகாரர்கள், இளங்கட்சிகள் பொதுமக்கள் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

உள்ளாட்சி அரசு

2026 JAN 12



### ஊத்தங்கரை அரசு பாலிடெக்னிக்

# மாணவ - மாணவிகளுக்கு இலவச மடிக்கணினி!

**ஊத்தங்கரை ஜன:12**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அரசினர்பாலிடெக்னிக்கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பயிலும் 235 மாணவ – மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மடிக்கணினி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது, நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் விஜயன் வரவேற்புரை ஆற்றினார்,

பர்கூர்சட்டமன்ற உறுப்பினரும், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான மதியழகன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு 235 மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் 'வடக்கு ஒன்றிய செயலாளர்மூன்றாம்பட்டி எஸ் குமரேசன், மத்திய ஒன்றிய செயலாளர எக்கூர் செல்வம் ,தெற்கு ஒன்றிய செயலாளர் ரஜினிசெல்வம், மாவட்ட பொருளாளர் கதிரவன், மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாவட்டத் துணைச் செயலாளர் சந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி, வி.சி.க. ஊத்தங்கரைதொகுதி மாவட்ட செயலாளர்குபேந்திரன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் காந்தி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் லயோலோ ராஜசேகர், உள்பட பலர் கலந்து கொண்டனர்.



ஜெகதாப் ஊராட்சியில் பொங்கல் பரிசு தொகுப்பு மாவட்ட தி.மு.க. நெசவாவளர் அணி துணை அமைப்பாளர் கோவிந்தராஜன் தலைமையில் வழங்கப்பட்டது.

### மொரப்பூர் அருகே

# ஆட்டோ கவிழ்ந்து டிரைவர் சாவு!

**அரூர், ஜன.12**

தருமபுரி மாவட்டம் அரூர் மேல் பாட்சா பேட்டை சேர்ந்தவர் அகில்பாஷா இவரது மகன் அப்துல்லாஅமித் (49) இவர் அரூரில் சொந்தமாக ஆட்டோ வாங்கி ஓட்டி வந்தார்.

இந்நிலையில் அரூர் அரசு மருத்துவமனையில் இருந்து மொரப்பூர் அருகே உள்ள சாமண்டஹள்ளிக்கு இருவரை சவாரிக்காக தனது ஆட்டோவில் அழைத்துச்சென்றுள்ளார்மொரப்பூர். சாமன்டஹள்ளி சாலையில் சென்றபோது ஆட்டோ நிலை தடுமாறி



கவிழ்ந்தது இதில் ஆட்டோ ஓட்டுனர் அப்துல்லாஅமித் எகிறி குதித்துள்ளார் அப்போது அவர் மீது ஆட்டோ கவிழ்ந்ததில் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது இதையடுத்து அங்கு உள்ளவர்கள் அவரை மீட்டு அரூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர் பின்னர் மேலே சிகிச்சைக்காக தர்மபுரியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி அப்துல்லாஅமித் உயிரிழந்தார். இது குறித்து மொரப்பூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# டிரைவர்களுக்கு இலவச கண் சிகிச்சை முகாம்!

**ராசிபுரம், ஜன.12**

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் தேசிய சாலை பாதுகாப்பு மாத விழாவை



முன்னிட்டு ஒட்டுனர்களுக்கு இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. தமிழகத்தில் சாலை விபத்துகளை குறைக்கவும், பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்யவும் ஆண்டுதோறும் தேசிய சாலை பாதுகாப்பு மாத விழா கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இந்த விழாவின் போது டிரைவர்களுக்கு மருத்துவ பரிசோதனை மற்றும் விழிப்புணர்வுநிகழ்ச்சிகள் நடத்தப்படுவது வழக்கம். ராசிபுரம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் இலவச கண் சிகிச்சை முகாம் நடந்தது.

இந்த முகாமிற்கு ஆர். டி . ஓ . , பதுவைநாதன் தலைமை வகித்தார். மோட்டார் வாகன இன்ஸ்பெக்டர் செல்வகுமார் முன்னிலை வகித்தார். சேலம் ஐ பவுண்டேஷன் மேலாளர் கோவிந்தசாமி தலைமையில் டாக்டர் அஸ்வின் சேஹி மற்றும் மருத்துவ குழுவினர் ஒட்டுனர்களுக்கு கண் பரிசோதனை செய்தனர்.

இந்த முகாமில் பழகுனர் உரிமம், புதிய ஓட்டுனர் உரிமம் பெறுதல், உரிமம் புதுப்பித்தல் மற்றும் வாகன தகுதிச் சான்று உள்ளிட்ட பணிகளுக்காக வந்திருந்தசுமார், 200 டிரைவர்களுக்கு இலவசமாக கண் பரிசோதனை நடந்தது.



ஒசூர் சிப்காட்டில் "தூய்மைப் பணி முகாமை ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்

### காளை மாடுகளுக்கான

# அலங்கார கயிறுகள் விற்பனை மும்முரம்!

**கிருஷ்ணகிரி, ஜன.12**

தமிழர் திருநாளாம் பொங்கல் மற்றும் மாட்டுப் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு காளைகளை அலங்கரிக்க விதவிதமான கயிறுகள் சந்தைகளில் குவிந்து வருகின்றன. மஞ்சள், சிவப்பு, பச்சை உள்ளிட்ட பல வண்ணங்களில் தயாரிக்கப்பட்ட பாரம்பரிய கயிறுகள், மணிகள் பொருத்தப்பட்ட அலங்கார



கயிறுகள், நவீன வடிவமைப்பில் தயாரிக்கப்பட்ட பல வகை கயிறுகள் என விவசாயிகளின் கவனத்தை ஈர்க்கின்றன. மாட்டுப் பொங்கல் நாளில் காளைகளை சிறப்பாக அலங்கரித்து வழிபடும் பாரம்பரியம் தொடர்ந்துவரும் நிலையில், இந்த அலங்கார கயிறுகளுக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. குறிப்பாக கிராமப்புற சந்தைகளில் வியாபாரம் சூடு பிடித்துள்ளதுடன், உள்ளூர் கைவினைஞர்கள் தயாரிக்கும் கயிறுகளுக்கும் அதிக தேவை ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

### பரமத்திவேலூர் அருகே

# மூதாட்டியை கட்டிப்போட்டு நகை, பணம் கொள்ளை!

## மர்மநபர்கள் கைவரிசை!!

**பரமத்திவேலூர், ஜன.12**

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் தாலுகா, அண்ணா நகர் அருகே உள்ள நெட்டையாம்பாளையம், பொத்திக்காடு பகுதியை சேர்ந்தவர்சுப்பிரமணி. இவரது மனைவி ராசம்மாள்(73) சுப்பிரமணி தனது மகள் பூங்கொடி வீட்டிற்கு சென்றிருந்தார். ராசம்மாள் மட்டும் தனது மகள் செல்வி வீட்டிற்கு சென்று விட்டு மீண்டும் தனது வீட்டுக்கு இரவு வந்துள்ளார். பிறகு சாப்பிட்டு விட்டு ராசம்மாள் வீட்டிற்கு வெளியே வந்துள்ளார். அப்போது திடீரென அங்கு வந்த மர்ம நபர்கள் சிலர் அவரை பிடித்து வீட்டிற்குள் தள்ளி சென்று சத்தம் போடாமல் இருக்க வாயில் துணிவைத்து திணித்ததால் மயக்கமடைந்துள்ளார்.

பின்னர் அவரது கை மற்றும் கால்களை கட்டுப்போட்டுவிட்டு மர்ம நபர்கள் வீட்டில் இருந்த 7 1/2 பவுன் தங்க செயின் மற்றும் ரூ.10 ஆயிரம் ஆகியவற்றை திருடிக்கொண்டு தலமறைவாகி விட்டனர். மயக்கம் தெளிந்து வீட்டிற்கு வெளியே வந்து சத்தம் போட்டு அக்கம் பக்கத்தில் இருந்தவர்களை அழைத்து நடந்த சம்பவத்தை தெரிவித்துள்ளார். தகவல் அறிந்து அங்கு வந்த வேலூர் போலீசார் மூதாட்டியிடம் இருந்து நகை மற்றும் பணத்தை திருடி சென்ற மர்ம நபர்கள் குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். கைரேகை நிபுணர்களும் அங்கு பதிவான ரேகைகளை பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். சம்பவத்தில் காயமடைந்த மூதாட்டி ராசம்மாள் வேலூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.



கிருஷ்ணகிரியில் ஊரக, நகர்ப்புற வாழ்வாதார இயக்க பணியாளர்கள் சங்கம் சார்பில், 14 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி 2–வது நாளாக காத்திருப்பு போராட்டம் மாவட்ட தலைவர் அண்ணாமலை தலைமையில் நடந்தது.

### கிருஷ்ணகிரியில்

# சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி!

**கிருஷ்ணகிரி, ஜன.12**

கிருஷ்ணகிரியில்சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

கிருஷ்ணகிரி புதிய பஸ் நிலையம்அருகில், தேசிய சாலை பாதுகாப்பு மாத விழாவையொட்டி, சாலை பாதுகாப்பு குறித்த பேசும்போது,

ஆட்டோ ஓட்டுனர்களுக்கு விரைவில் மருத்துவ பரிசோதனை முகாம் நடத்தப்படும் என்றார்.

பின்னர் ஆட்டோ ஓட்டுனர்களுக்கு விழிப்புணர்வு நோட்டீஸ்களை நீதிபதி வழங்கினார்.

இதில், நகர போக்குவ



விழிப்புணர்வு நிகழ்ச்சி, மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு மற்றும் ரெட் கிராஸ் அமைப்பு சார்பில் நேற்று நடந்தது. இதில் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு செயலாளரும், சார்பு நீதிபதியுமான பத்மநாபன் தலைமை வகித்து ரத்து உதவி காவல் ஆய்வாளர் ஜோதிபிரகாஷ், இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி மாவட்ட கிளை சேர்மன் செபாஸ்டியன், மாவட்ட செயலாளர் செந்தில்குமார் உள்பட 50–க்கும் மேற்பட்ட ஆட்டோ ஓட்டுனர்கள் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாவட்டம் ஜேடர்பாளையத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமை முன்னாளர் எம்.எல்.ஏ.வும், மாவட் தி.மு.க. பொறுப்பாளருமான கே.எஸ்.மூர்த்தி தொடங்கி வைத்தார்.

### ஜேடர்பாளையத்தில்

# நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம்!

**வேலூர், ஜன.12**

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் தாலுகா, கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம் ஜேடர்பாளையத்தில் உள்ள நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. முகாமை முன்னாள் எம்.எல்.ஏ.வும், நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க பொறுப்பாளருமான கே.எஸ் .மூர்த்தி தொடங்கி வைத்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த முகாமில் உயர் ரத்த அழுத்தம், நீரழிவு நோய் மற்றும் இரத்தப் பரிசோதனை, மின் இதய வரைபடம், எக்கோ, அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், எக்ஸ்ரே, காசநோய் ஆரம்பகட்ட புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள் உள்ளிட்டவை மேற்கொள்ளப்பட்டது. மேலும், சிறப்பு பொது நல மருத்துவம், பொது நல அறுவை சிகிச்சை மருத்துவம்உள்ளிட்ட 17 துறைகளை சார்ந்த நிபுணர்களின் மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.

மேலும் தலைசிறந்த மருத்துவ நிபுணர்களால் பரிசோதனை செய்து சிகிச்சை மற்றும் மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டு தேவைப்படும் நோயாளிகளுக்கு நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தொடர் சிகிச்சைக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டது. நாமக்கல் மேற்கு மாவட்ட கழக பொறுப்பாளருமான கே .எஸ். மூர்த்தி பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். முகாமில் மாவட்ட சுகாதார அலுவலர் பூங்கொடி நாமக்கல் மருத்துவக் கல்லூரி டீன் (பொறுப்பு) டாக்டர் குணசேகரன், கபிலர்மலை மத்திய ஒன்றிய கழக பொறுப்பாளர் வக்கீல் சரவணக்குமார், கபிலர்மலை வடக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் தளபதி சுப்பிரமணியம், கபிலர்மலை வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் .சாந்தி, மாவட்ட பொறியாளர் அணி தலைவர் அருண், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ஜெகதீசன், கபிலர்மலை ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் செவன் ஸ்டார் மோகன்ராஜ், ஒன்றிய கழகபொருளாளர்வக்கீல்கிருஷ்ணகுமார் மற்றும் சுகாதாரத்துறை அலுவலர்கள், மருத்துவத்துறை அலுவலர்கள், வருவாய் துறை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



அரூரில் அ.தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் கே.பி, அன்பழகன் தலைமையில் திண்ணை பிரசாரம் நடந்தது.

# தர்மபுரியில் ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்க பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்!

## வெங்கடேஸ்வரன் எம்.எல்.ஏ. ஆதரவு!!



**தர்மபுரி, ஜன. 12**

தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்க அனைத்து பணியாளர்கள் நல சங்கம் சார்பில் தர்மபுரி மாவட்ட கலெக்டர் அலுவலகம் அருகே கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத்தின் தலைவர் முத்துசாமி தலைமை வகித்தார். செயலாளர் சிவலிங்கம் பொருளாளர் பிரதீப் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் தங்களை பணி நிரந்தரம் செய்து கால முறை ஊதியம் வழங்க வேண்டும். பணித் திறன் மதிப்பீடு என்ற பெயரில் பழிவாங்கும்நடவடிக்கையை கைவிட்டு 15 சதவீத ஊதிய உயர்வு வழங்க வேண்டும். மகளிர் பணியாளர்களுக்கு 12 மாத கால மகப்பேறு விடுப்பு வழக்க வேண்டும். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தி ற்கு தனி துறையை உருவாக்க வேண்டும். பணியின் போது உயிரிழந்த பணியாளர்களின் குடும்பத்திற்கு 10 லட்சம் நிதி உதவி வழங்க வேண்டும். அனைத்து நிலை பணியாளர்களுக்கும் மருத்துவ காப்பீடு விபத்து காப்பீடு மற்றும் ஆயுள் காப்பீடு வழங்க வேண்டும் உள்ளிட்ட 15 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தினர். இந்த கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு தர்மபுரி எம்எல்ஏ வெங்கடேஸ்வரன் கலந்து கொண்டு சட்டமன்றத்தில் இது குறித்து பேசுவதாக ஆதரவு தெரிவித்து பேசினார்.



பாப்பிரெட்டிப்பட்டி தொகுதி வி.சி.க.வை சேர்ந்த மாவட்ட, மண்டல புதிய பொறுப்பாளர்கள் முன்னாள் அமைச்சரும், மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான பி.பழனியப்பனை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.